**இலங்கை அணுசக்தி சபை - 2023**

------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை அணுசக்தி சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளிற்கு உரித்தான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களின் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு

அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் காலவரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்றிருந்த மூலதன மானிய பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணும் கொள்கை மீளாய்வாண்டின் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் இடைக்கால ஏற்பாடுகளின் படி திருத்தப்பட்டிருந்தது. அதன் படி, இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 24 ஆம் பிரிவின் படி, தொடர்புபட்ட குறித்த கொள்கை மாற்றத்தை பின்னோக்கி நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். எனினும், கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 86.8 மில்லியன் பிற்போடப்பட்ட வருமானம் மீளாய்வாண்டின் போது கணக்கீட்டுக் கொள்கை மாற்றமாக பின்னோக்கி சீராக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்று கணக்கில் சேர்க்கப்படாத ரூபா 81.48 மில்லியன் மதிப்புள்ள மத்தியதரப்படுத்தப்பட்ட | பதிலளிக்கப்படவில்லை . | முன்னைய ஆண்டின் கணக்கில் |

| | | | |
|---|---|---|---|
| | கதிரியக்க கழிவுப் பொருட் களஞ்சியம் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்படுகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் படி, நிதிக்கூற்றுக்கள் பின்னோக்கி திருத்தப்பட்டு பின்னோக்கிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக முன்னைய ஆண்டில் பிடித்து வைக்கப்பட்டிருந்த மிகையான ரூபா 76.67 மில்லியனால் குறைவாகவும் முன்னைய ஆண்டின் நிலையான சொத்துக்கள் ரூபா 76.67 மில்லியனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன. | | சேர்க்கப்படாத தவறுகளை சீராக்குகையில், நிதிக்கூற்றுக்கள் திருத்தம் செய்யப்பட்டு பின்னோக்கி சீராக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் மானியமாக பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிராத ரூபா. 3.29 மில்லியன் பெறுமதியான அறிவியல் உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் படி, நிதிக்கூற்றுக்கள் பின்னோக்கி திருத்தப்பட்டு பின்னோக்கிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக முன்னைய ஆண்டில் பிடித்துவைக்கப்பட்ட மிகையான ரூபா 2.41 மில்லியனால் குறைவாகவும், நிலையான சொத்துகள் ரூபா 2.41 மில்லியனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன. | பதிலளிக்கப்படவில்லை . | முன்னைய ஆண்டின் கணக்கில் சேர்க்கப்படாத தவறுகளை சீராக்குகையில், நிதிக்கூற்றுக்கள் திருத்தம் செய்யப்பட்டு பின்னோக்கி சீராக்கப்பட வேண்டும் |
| (஁) | கோபால்ட் 60 மூலப்பொருளுக்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் ரூபா 11.59 மில்லியன் குறைவாகக் கணக்கிடப்பட்ட தவறை மீளாய்வாண்டின் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் படி, நிதிக்கூற்றுக்கள் பின்னோக்கி திருத்தப்பட்டு பின்னோக்கிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது பிடித்துவைக்கப்பட்ட மிகையான ரூபா 11.59 மில்லியனால் அதிகமாகவும், நிலையான சொத்துகள் ரூபா 11.59 மில்லியனால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன. | பதிலளிக்கப்படவில்லை. | முன்னைய ஆண்டின் கணக்கில் சேர்க்கப்படாத தவறுகளை சீராக்குகையில், நிதிக்கூற்றுக்கள் திருத்தம் செய்யப்பட்டு பின்னோக்கி சீராக்கப்பட வேண்டும் |
| (உ) | நியமத்தின் 13 ஆம் பந்தியின் படி சேவை வழங்கப்படுகையில் பயன்பாட்டிற்காக அல்லது வேறொருவருக்கு வாடகைக்கு வழங்கப்படுவதற்காக அல்லது நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஒரு அறிக்கைக் காலப்பகுதிக்கும் மேலான வாழ்க்கைக் காலத்தைக் கொண்ட மூலதன சொத்துகள் ஆதன, இயந்திர உபகரணமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 24.1 மில்லியன் பெறுமதியான தனிநபர் கண்காணிப்பு சேவைகள் (Personal Monitoring | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | Service/TLD Service) வழங்கப்படுவதற்காகப் பயன்படுத்தப்படும் 50 மாத கால வாழ்க்கைக் காலத்தைக் கொண்ட ரீஎல்டீ அட்டைகளும் ஹோல்டர்ளும் (TLD Cards and Holders) மற்றும் கேமா மையம் அமைந்துள்ள காணி ஆதன, இயந்திர உபகரணமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 13 ஆம் பந்தியின் படி சரியான சொத்து வகையை அடையாளம் காணப்பட்டிராமையால் மின்னணு சாதனங்கள், அலுவலக உபகரணங்கள், கணனி உபகரணங்களின் பெறுமதி முறையே ரூபா 2.9 மில்லியன், ரூபா 0.57 மில்லியன் மற்றும் ரூபா 5.8 மில்லியன் குறைவாகவும் அறிவியல் உபகரணங்களின் பெறுமதி ரூபா 9.27 மில்லியன் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் தாக்கத்தினால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வுச் செலவினம் ரூபா 258,597 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை . | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி சரியாக சொத்து வகை இனங்காணப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 15 ஆம் பந்தியின் படி ஓராண்டை விட அதிக காலத்திற்குப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் உதிரிப் பாகங்கள் ஆதன, இயந்திர உபகரணமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் கெமா மைய நிலையத்தில் உள்ள 183 தனிப் பொருட்கள் மற்றும் 10 தொகுப்புகளுடனான கெமா கதிர்வீச்சு ஆய்வகத்திற்கு உரித்தான உதிரிப் பாகங்கள் மதிப்பிடப்பட்டு ஆதன, இயந்திர உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஏ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 05 வருடங்களைப் பார்க்கிலும் பழைமை வாய்ந்த நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை மீதியான ரூபா 4.14 மில்லியன் தொடர்பாக பூர்த்தியடைந்த வேலையை இனங்காண்பதற்கும் சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நியமத்தின் 77 ஆம் பந்தியின் படி சேத இழப்பிற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஐ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் படி, கிரயக் கட்டமைப்பின் கீழ் பேணப்படும் சொத்துகளின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்பட்டு எதிர்பார்க்கப்படும் நிலைகள் மதிப்பீடுகளில் இருந்து மாறுபட்டிருப்பின் அந்த மாற்றங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் படி சீராக்கப்பட வேண்டிய போதிலும் 2023 | 2023 ஆம் ஆண்டின் போது பதிலளிக்கப்படவில்லை.<br><br>2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட பதில்: - மதிப்பு பூச்சியமாகக் காணப்படும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆம் திகதி பதிவேட்டில் பூச்சியமாகக் காணப்பட்ட போதிலும், சபையால் தொடர்ந்து பயன்படுத்தி வரும் ரூபா 83 மில்லியன் பெறுமதியான 833 நிலையான சொத்து உருப்படிகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக் குறிப்பு 1.3.1 இன் படி, சபையால் ஆதன, இயந்திர, உபகரணங்கள் கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டு முறையின் அடிப்படையில் அறிக்கையிடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கிரய முறைமையைப் பயன்படுத்தும் சொத்து வகுப்பும் மீள் மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்தும் சொத்து வகுப்பு எவை என்பது குறித்த விபரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துகளில் விஞ்ஞானக் கருவிகள், மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் மீள்மதிப்பீட்டு செய்யப் பட்ட உபகரணங்கள் பட்டியலிடப்பட்டு ஒப்பிடப்படும் போது அடையாளம் காண்பதற்குச் சிரமமான உபகரணங்களை இனங்க ாண்பதற்காக ஓர் குழு நியமிக்கப்பட்டு குழுவின் பரிந்துரைப்பில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ஒ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையில் உள்ள செயற்படாத உபகரணங்களைச் சரியாக இனங்கண்டு, நியமத்தின் 77ஆம் பந்தியின் பிரகாரம் இழப்புகளுக்கான நட்டத்திற்காக ஒதுக்கமொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. மேலும், 86 மற்றும் 91 பந்திகளின் படி தேவையான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செயலற்ற உபகரணப் பொருட்கள் 475 எனக் கணக்காய்விற்குத் தரவுகள் வழங்கப்பட்டிருந்தன, மீளாய்வாண்டின் போது அப் பொருட்களின் எண்ணிக்கை 132 ஆக பட்டியலிடப்பட்டிருந்தன. அவ் வேறுபாடுகளிற்கான காரணம் கணக்காய்வில் கண்டறியப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஓ) | 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 195.6 மில்லியன் பெறுமதியான கொபால்ட் 60 மூலப்பொருளைப் பயன்படுத்தி முடிந்த பின்னர் அதை அகற்றுவதற்காகத் தேவையான செலவினங்களுக்காக, இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 30 ஆம் பந்தியின் படி தேவையான ஏற்பாடுகளை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட பதில் :- 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கொபோல்ட் 60 மூலப்பொருள் கொள்வனவு ஒப்பந்த உடன்படிக்கை தொடர் இல. 07 இன் படி அகற்றல் செலவினம் எமது நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக அதனை மீள் ஏற்றுமதி | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செய்வதற்கான செலவினம் மதிப்பிடப் பட்டு 2023 நிதிக் கூற்றுக்களில் தேவையான நிதியம் ஏற்பாட்டிற்கான நடவடிக்கை எடுத்துள்ளேன். | |
| (ஔ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் 118 ஆம் பந்தியின் படி பரிவர்த்தனையாகாத கொடுக்கல் வாங்கல்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட அறவீடுகள் அந் நியமங்கள் பயன்படுத்தப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் 3 ஆண்டுகளிற்குள் தமது கணக்கீட்டு கொள்கையை திருத்தி, அதனை அடையாளம் கண்டு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதன்படி, இந் நியமம் செயற்படுத்திய திகதியில் காணப்பட்ட 2023 திசெம்பர் 31 ஆம் திகதிய ரூபா 1,921.3 மில்லியன் பெறுமதியான இரண்டு மூலதன மானிய ஒதுக்கங்கள் அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (க) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 - ஊழியர் நலன்கள் தொடர்பான நியமத்தின் 77ஆம் பந்தியின் படி, பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் வாழ்க்கைக்கால மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டிராததுடன் நியமத்தின் 141 ஆம் பந்தியின் படி தேவையான வெளிப்படுத்தல்களை நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பணிக்கொடைக்கான ஏற்பாடு வாழ்க்கைக் கால மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயற்திறன் கொண்ட ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு இயந்திரத்தைப் பெறுமானத்தேய்விடுவதற்காக ஏற்ற கணக்கீட்டுக் கொள்கையைத் தயாரித்திராத துடன் ரூபா 176 மில்லியன் தொகையான கெமா கதிரியக்க இயந்திரத்தை (Plant) ஆதன, இயந்திர உபகரணங்களின் கீழான விஞ்ஞான ரீதியான உபகரணத் தொகுதிக்கு உள்ளடக்கப்பட்டு 5 சதவீதப்படி அதாவது ரூபா 8.8 மில்லியன் தொகையால் வருடாந்தம் பெறுமானத்தேய்விடப் பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்ப டுகையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையைப் பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 3.35 மில்லியன் பெறுமதியான பளு தூக்கும் இயந்திரம் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என வகைப்படுத்தப்பட்டு உரிய வீதத்தில் பெறுமாமனத்தேய்வு செய்யப்படுவதற்குப் பதிலாக அதனை அலுவலக உபகரணங்கள் எனக் கருதி 7.5 சதவீதமாக ரூபா 251,250 பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சொத்து வகுப்பு சரியாக இனங்காணப்பட்டு பெறுமானத்தேய்வு வீதம் தீர்மானிக்கப்பட்டு பெறுமானத்தேய்வுச் சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) வெல்டிங் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக ஒரு தனியார் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் படி, அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த 24 இயந்திரங்களின் உரிமை ஒப்பந்தக் காலமுடிவில் சபைக்குச் சொந்தமாக்கப்பட வேண்டிய போதிலும். குறித்த இயந்திரங்கள் தொடர்பான அறிக்கைகள் முறையாக பேணப்பட்டிராததுடன் நிதிக்கூற்றுக்களில் அவ் இயந்திரங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சகல தகவல்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 15.81 மில்லியன் பெறுமதியான இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட நடைமுறைச் சொத்துக்களாகக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1.03 மில்லியனான வருமான வரி சொத்து மீதியாக தெளிவாக்குவதற்குள்ள இயலுமை தொடர்பான உரிய மூல ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சகல மீதியையும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) ரூபா 46.7 மில்லியன் பெறுமதியான வர்த்தகக் கடன்பட்டோர்களில் கடன்கள் வசூலிக்கப்பட இயலாத இடருடனான கடன்பட்டோர் மீதிகள் அடையாளம் காணப்பட்டு இழப்பு நட்ட ஒதுக்கத்தை நாளதுவரையாக்காது 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 501,441 தொகையான ஐயக்கடன் ஏற்பாடு மாற்றமின்றிக் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | இடருடனான கடன்பட்டோர் மீதி இனங்காணப்பட்டு இழப்பு நட்டத்தை ஒதுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய காசு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 46.72 மில்லியனான வர்த்தகக் கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 7.6 மில்லியனான கடன்பட்டோர் 1 வருடம் முதல் 12 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குள் வசூலிக்கப்பட வேண்டிய கடன்களைக் கொண்டிருந்ததுடன் இதில் ரூபா 4.75 மில்லியனான கடன்பட்டோர் ஒரு வருடத்திலும் | பதிலளிக்கப்படவில்லை. | வர்த்தகக் கடன்களை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

குறைவான கடன்பட்டோரைக் கொண்டதாகவும் ரூபா 2.85 மில்லியனான கடன்பட்டோர் இரண்டு வருடங்கள் முதல் 10 – 12 வருடங்கள் வரையான காலப்பகுதியைக் கொண்ட கடன்பட்டோர் மீதியைக் கொண்டதாகவும் காணப்பட்டது.

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 102 மற்றும் 104 | அணு ஆய்வுத் தேசிய மையத்தின் இரண்டு ஆய்வகங்களில் ரூபா. 230,113 பெறுமதியான உபகரணமும் பெறுமதி தொடர்பான தகவல்கள் இல்லாத மேலும் மூன்று விஞ்ஞான உபகரணங்களும் காணாமற் போயிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 | செயற்திட்டம் பூர்த்தியடைந்த நாள் முதல் 2 வருடங்களுக்குள் செலுத்தப் பட்டிராத ரூபா 11.9 மில்லியனான 4 பிடிமானப் பண மீதிகள் தொடர்பாக தொடர்புபட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2021 | | | |
| (i) | பொது முயற்சிகள் கூட்டமைப்பு கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டல் கோவையின் 4.3 ஆம் பந்தி மற்றும் இணைப்பு 01 இன் 1 ஆம் பந்தி | சுபையின் பல்வேறு துறைகளில் நிலவும் இடரை மதிப்பிடுவது தொடர்பாக முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் கூட்டங்களில் கலந்துரையாடப் பட்டிராததுடன் சபையால் உபாயமார்க்க திட்டங்களிற்கு இணங்க எதிர்வுகூறப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூல் 6.6 ஆம் பந்தி | சபையால் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய இல. 04/2018 எனும் சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் மூலம் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டல். | நிதி அல்லாத சொத்துகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், சபையின் மோட்டார் வாகனங்களைத் தவிர ரூபா 2,995 மில்லியன் கிரயமான ஏனைய நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது பதிலளிக்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பதில் :- விஞ்ஞான உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நிலையான சொத்து பதிவேட்டிற்கும் மீள்மதிப்பீட்டுப் பதிவேடுகளுககும் இடையிலான வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 74.5 மில்லியனிற்கான மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் ரூபா 19.4 மில்லியனான பற்றாக்குறை காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 93.9 மில்லியன் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் மானியமாக ரூபா 163.2 மில்லியன் கிடைக்கப்பெற்றமையே இவ் வளர்ச்சிக்கான முக்கியமான காரணமாக இருந்தது.

**2.2 முக்கிய நிதிக்கூற்று உருப்படிகளில் உள்ள முரண்களின் பகுப்பாய்வு**

| நிதிக்கூற்று விடயங்கள் | 2023 | 2022 | முரண்கள் | முரண்களின் பகுப்பாய்வு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| அயனைசர் சேவை வருமானம் - கெமா மத்தியநிலையம் | 70.9 | 58.9 | 12 | 20.3 |
| அணு ஆய்வுச் சேவை வருமானம் | 64 | 46.3 | 17.7 | 38 |
| வெல்டிங் தகைமை பெறல் பாடநெறி வருமானம் | 28.4 | 5.3 | 23.1 | 436 |
| சம்பள வேதனங்கள் மற்றும் சேவை நலன் செலவினங்கள் | 141 | 152 | (11) | 7.2 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருள் செலவினங்கள் | 59.8 | 31.3 | 28.5 | 91 |

**2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு**

| **விகிதாசாரம்** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதாகாரம் | 2.67 | 2.36 | 2.69 | 4.53 | 2.87 |
| உரிமை மீதான நலன் பகுப்பாய்வு | 2.76 | 0.75 | 4.9 | 0.15 | 1.6 |
| மொத்தச் சொத்து நலன் பகுப்பாய்வு | 2.6 | 0.7 | 4.6 | 0.1 | 1.5 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 4 (ஐ) பிரிவின் பிரகாரம் சபையினால் இலங்கையில் அமைந்துள்ள கதிர்வீச்சுள்ள கனிய வளங்களின் உள்ளமையை கண்டுபிடித்தல் வேண்டும். இதன் படி புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்துடன் தொடர்புபட்டு முறையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உரிய கதிர்வீச்சுள்ள கனிய பண்டங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தக் கூடிய செய்முறை ஒன்றைத் தயாரித்திருக்கவில்லை. | IAEA இல் தொழிநுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டம் ஒன்று (SRL/02/009) இன் கீழ் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்துடன் இணைந்து நாட்டில் காணப்படும் இயற்கை கதிர்வீச்சுள்ள வளங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இங்கு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தொழிநுட்ப அறிவு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் தேவையான உபகரண தொகுதிகளும் வழங்கப்பட்டிருந்தன. நாட்டில் காணப்படும் இயற்கை வளங்கள் தொடர்பாக தகவல்கள் சேகரித்தல் அந்த பணியகத்தின் பொறுப்பாக காணப்படுவதனால் அதற்குத் தேவையான அணுதொழிநுட்பம் தொடர்பான அறிவு அணுசக்தி சபையினால் இதுவரையிலும் வழங்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக அவர்களுக்கு எதிர்காலத்தில் அவ் ஆய்வு நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு உரிய நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. கதிர்வீச்சு அவதானிப்புக்காக RPTS பிரிவின் மூலம் தொழிநுட்ப உதவி வழங்கப்பட்டிருந்ததுடன் மாத்தளை, பல்லேகம, தம்புள்ள மற்றும் எலஹர ஆகிய பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும் கவுடுபெல்லல்ல, நாஉல மற்றும் எலகர பிரதேசங்களில் இனங்காணப்பட்ட மேல் பின்னணிப் பிரதேசங்களில் இடம்சார் கெமா அளவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக 2022 ஆம் ஆண்டின் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | இது தொடர்பாக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | வணிக வள திட்டமிடல் முறைமை (ERP) உருவாக்கம், மேம்பாடு, நிறுவல், செயற்படுத்தல், பராமரிப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக, பெறுகை வழிகாட்டல் நடைமுறையின் 4.1.1 (இ) இன் பிரகாரம், போதிய ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாது 2021 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக வழிகாட்டலின் 2.8.4 (ஈ) இன் பிரகாரம் வெளிப்புற பெறுகை விடயம் தொடர்பான தேர்ச்சி கொண்ட உறுப்பினர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 மார்ச் மாதம் ரூபா 6.87 மில்லியனுக்கு குறித்த பணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன் 2023 மே வரையில் ஒப்பந்தத் தொகையில் ரூபா 2.43 மில்லியன் தொகை (35 சதவீதம்) செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக் காலம் 2023 திசெம்பர் 16 அன்று முடிவடைந்திருந்தது, குறித்த பணிகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் உடன்படிக்கைக் காலம் பூர்த்தியடைந்திருந்தமையால் சபையால் ஒருபக்கச்சார்பாக ஒப்பந்தத்தை இரத்து செய்ய பணிப்பாளர் சபைப் பத்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர்சபையால் இது தொடர்பா ஓர் குழு நியமிக்கப்பட்டு ஓர் அறிக்கை கோரப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | போதிய ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதை அடுத்து பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் பெறுகை வழிகாட்டல் நடைமுறை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டின் போது அணு ஆராய்ச்சி தேசிய மையத்தில் நிறுவப்பட்ட ரூபா 8.2 மில்லியன் பெறுமதியான மின்பிறப்பாக்கி மீளாய்வாண்டின் பெப்ரவரி | பதிலளிக்கப்படவில்லை. | சொத்துக்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | முதல் செயலிழந்த நிலையில் காணப்பட்ட போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2024 அக்டோபர் மாதத்திலும் பழுது பார்க்கப்படாதிருந்ததுடன் குறித்த இயந்திரம் செயற்படாத நிலையிலும் ஏனைய உதிரிப்பாகங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என அவதானிக்கப்பட்டது. சேவை உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு முறையான இயந்திரப் பராமரிக்கப் பட்டுள்ளதா எனப் பரீட்சிப்பதற்காக தேவையான இயந்திரத்தின் சேவை உடன்படிக்கைகள் மற்றும் சேவை விபரங்கள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தால் ஏற்பட்ட கடல்சார் சுற்றுச்சூழல் சேதத்தை மதிப்பீடு செய்யவும், அச் சேதத்தைக் குறைப்பதற்காக சர்வதேச அணு சக்தி நிறுவனத்தால் சபைக்கு அவ் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த குறுங்கால உதவிச் செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்படுவதற்கு உடன்பட்டிருந்த ரூபா 127 மில்லியன் (யூரோ 363,498) பெறுமதியான 22 தொழில்நுட்ப உபகரணங்களுக்காக தேவையான சுங்கக் கட்டணங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கணக்காய்வுத் தினமாகிய 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் இதில் ரூபா 55 மில்லியன் (யூரோ 158,782) பெறுமதியான 11 பொருட்களை விடுவிக்கப்படாது சுங்கத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட எஞ்சிய ரூபா 72 மில்லியன் (யூரோ 204,716) பெறுமதியான 11 உபகரணங்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திற்கும் (NARA) வழங்கப்பட்டதாக சபையால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் உபகரணங்கள் நிதிப் பிரமாணம் 751, 752 மற்றும் 753 இன் பிரகாரம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டிராததன் காரணமாக குறித்த உபகரணங்களின் உள்ளமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட இயலாதிருந்தது. மேலும், செயற்திட்டத்துடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என கணக்காய்வின் போது அவதானிக்கப் பட்டது. ஊரிய உபகரணங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கான கப்பல் விபத்தால் ஏற்பட்ட | பதிலளிக்கப்படவில்லை. | ஏற்ற வகையில் ஒதுக்கீடு பெறப்பட்டு உரிய உபகரணங்களை விடுவித்துக்கொள் வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த நோக்கிற்காகப் பயன்படுத்த வேண்டியதுடன் உரிய தகவல்கள் கணக்காய்விற்காக ச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடல்சார் சுற்றுச்சூழல் சேதத்தை குறைப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அவசியமான ஒருங்கிணைப்பு நடவடிக்கை கள் எதுவும் சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் உயிரியல் ஆய்வகத்தில் நிறுவப்பட்ட ரூபா 23 மில்லியன் பெறுமதியான உபகரணத்திற்கு (ICP-MS) தேவையான சேவை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிராததுடன் அந்த உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் கிரய நலன் குறித்து பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இவ் உபகரணம் 2021 ஆம் ஆண்டின் போது செயலிழந்து பழுதுபார்க்கப்பட்டதை அடுத்து 2022 ஆம் ஆண்டின் போது மீள செயலிழந்திருந்ததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2024 செப்தெம்பர் வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் வருமானம் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் ரூபா 256,000 வருமானம் மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது பதிலளிக்கப்படவில்லை.<br><br>2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பதில்: எம்மால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு பதிலளிக்கையில், எம்மால் தாமதக் கட்டணமாக பணத்தை அறவிடுவதும் டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு குறைந்ததன் காரணமாக, இவ் வழங்கலால் தொலைபேசி மென்பொருள், ஆர்கான் (Argon) வாயு சிலிண்டர் 04 மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான வெளிநாட்டு பயிற்சியை வழங்க முடியாது எனவும் சம்பந்தப்பட்ட வழங்கல் நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட சேவை உடன்படிக்கையைப் பராமரிப்பதற்காக விலைகள் பின்னர் மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக ஏற்பட்ட சிக்கலான நிலை நீடித்ததுடன் பின்னர கம்பனியால் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் சேவை உடன்படிக்கை தொடர்பாக நிலவிய சிக்கல்களை தீர்க்கப்பட்டு கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட விலை அடிப்படையில் சேவை உடன்படிக்கை ஒன்றைப் பேணுவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.<br><br>இவ் உபகரணம் ஓர் விசேட உபகரணம் என்பதனால் இதனைப் பழுதுபார்ப்பதற்கு சிறப்புத் திறன் இருக்க வேண்டியதுடன் இதன் படி | செலவின நலன்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்டு மேலும் செயற்திறனானமுறையில் சொத்துக்களைப் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கேள்வி கோரப்பட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தில் குறித்த திருத்த வேலைகள் வேறு கம்பனியால் மேற்கொள்ளப் பட்டிருந்தன. மேலும், வழங்குனர் நிறுவனத்தின் பரிந்துரையின் படி, உபகரணத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான பகுதிகள் மூல நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு உபகரணத்தில் பொருத்தப்பட வேண்டியுள்ளது. இதுவரையில், மேற்குறிப்பிடப்பட்ட கொள்வனவுகளை மேற்கொள்வதற்காக திணைக்களத்தின் பிரதான பெறுகை அங்கீகாரம் பெறப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உபகரணத்தை இயலுமானளவு விரைவில் திருத்தி திட்டமிடப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் காலப்பகுதியின் போது ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 256,000 மட்டுமேயான போதிலும் இக் காலப்பகுதியின் போது பல்வேறு வியாபார மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி தொடர்பான 350 மாதிரிகள் ஆராயப்பட்டுள்ளன. | |
| (ஈ) | ரூபா 670 மில்லியன் அளவு செலவில் 2014 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட பன்முக செயற்பாட்டு கெமா கதிர்வீச்சு ஆய்வகத்துடனான கெமா மையத்தை நிர்மாணிக்கையில் உள்ளூர் மீன், கருவாடு, காய்கறி மற்றும் பழங்களை சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கை எதிர்காலத்தில் உலக உணவு மையமாக்குவதன் மூலம் பெருமளவு அந்நிய செலாவணியை உழைப்பதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் இதற்குத் தேவையான எந்தவொரு மூலோபாயத் | பதிலளிக்கப்படவில்லை. | நிறுவுனம் ஒன்று ஸ்தாபிக்கப் படுகையில் அடிப்படையில் முன்வைக்கப்படும் நோக்கங்களை அடைவதற்கு ஏற்றவகையில் நிறுவக மூலோபா யத் திட்டத்தைத் தயாரித்து அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திட்டமும் சபையால் கணக்காய்வுத் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்குறித்த உணவுப் பொருட்களை கதிரியக்கமயமாக்குவதற்காக (irradiate ) உள்நாட்டு உணவு உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் ஈடுபட்டிருக்கவில்லை.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அணுப் பரிசோதனைகளுக்கான தேசிய மையத்தின் உள்ளக ஒட்டுத்தொழில் பிரிவால் ஒட்டுவேலைக் கலைஞர்களின் செயற்திறன் தகைமைச் சான்றிதழ் வழங்கும் சேவையை விரிவுபடுத்துவதும், சபையின் பராமரிப்பு செலவுகளை ஈடுசெய்யும் நோக்கில் 2023 யூலை மாதம் தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், குறித்த கம்பனி போட்டிப் பெறுகைச் செயன்முறையின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. ஒரு விண்ணப்பதாரருக்குச் சான்றிதழ் வழங்குவதற்காக ரூபா 87,904 க்கான கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 32,968 சபைக்கும் ரூபா 54,936 தனியார் கம்பனிக்கும் உரித்தாகும் வகையில் உடன்படிக்கையிடப்பட்டிருந்தது.<br><br>தனியார் கம்பனியினூடாக பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் விலைப்பட்டியல் (இன்வாய்ஸ்) கொடுக்கப்படும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. 11 பேருக்கு மட்டுமே விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்புத்துறையின் வருகை பதிவேட்டின் படி, 2023 ஆகஸ்ட் மாதம் 200 விண்ணப்பதாரர்கள் அளவில் இந்தப் பாடநெறியில் இணைந்திருந்தனர். உடன்படிக்கை நிபந்தனை 6 (எல்) இன் படி மாதத்திற்கு குறைந்தது 100 விண்ணப்பதாரர்கள் கம்பனியால் தொடர்ந்து பாடநெறிகளுக்காகப் பதிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் 2023 ஆகஸ்ட் இலிருந்து திசெம்பர் 31 வரை ஆகக்குறைந்தது 500 விண்ணப்பதாரர்களுக்காக சான்றிதழ் | பதிலளிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் சகல பெறுகைகளும் பெறுகை நடைமுறை வழிகாட்டலின் படி செயற்பட வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் விலைப்பட்டியல் வழங்கப்படும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட வேண்டியதுடன் சபையின் நோக்கங்கள் எய்தப்படும் வகையில் செயற்பட வேண்டும். |

கட்டணமாக ரூ. 16.48 மில்லியன் அறவிடப்பட வேண்டிய போதிலும் 65 விண்ணப்பதாரர்களுக்காக மாத்திரம் ரூபா 2.14 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது உள்ளக ஒட்டுப் பிரிவினால் ரூபா 28 மில்லியன் தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் தனியார் கம்பனியுடன் இணைந்து செயற்பட்டதன் பின் அவ் வருமானம் 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 3.3 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் குறித்த தனியார் கம்பனியால் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்காக 2024 ஆகஸ்ட் வரை ரூபா 2.9 மில்லியன் வருமானம் மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் படி உடன்படிக்கையிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.4 விளைவற்ற அல்லது குறைவான பயன்பாடுடைய ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது சபைக்கு வெளிநாட்டு மானியமாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 61 மில்லியன் பெறுமதியான 5 விஞ்ஞான உபகரணங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2024 செப்தெம்பர் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | பதிலளிக்கப்படவில்லை. | சொத்துக்கள் செயற்திறனான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |